இருந்தால் அந்த மையங்களைக் குழந்தைகள் அதிகமாக வருகின்ற பகுதிகளுக்கு மாற்றி மையங்கள் அமைத்துக் கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் 60 அல்லது 70 குழந்தைகள் இருக்க வேண்டும் என்று தான் அரசு அறிவிப்பு செய்திருக்கிறது. நானும் பல மையங்களைச் சென்று பார்த்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் 5, 6 குழந்தைகள் என்ற குறுகிய எண்ணிக்கையில் இல்லை ; 25, 35 என்ற அளவில் சில மையங்களில் குழந்தைகள் பயன் பெற்றுக் கொண்டிருந்தார்கள். நான் அதிகாரிகளை அது பற்றிக் கேட்ட நேரத்தில் இந்த மையத்திற்குக் குழந்தைகளைக் கூட்டி வருகிற ஆயாக்களினுடைய முறையீடு என்னவென்றால், இந்த மையங்கள் நீண்ட தொலைவில் அமைக்கப்பட்டிருப்பதால் குழந்தைகளை வெகுதொலைவில் இருந்து அழைத்து வர சிரமமாக இருக்கிறது ; எனவே தான் குழந்தைகள் பெருமளவில் இந்த மையங்களுக்கு வந்து பயன்பெற முடியாத நிலைமை இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் அரசு ஆராய்ந்து குழந்தைகள் அதிகம் இருக்கிற, மக்கள் அதிகம் வசிக்கிற பகுதிகளுக்கு இப்படிப்பட்ட மையங்களை மாற்றி அமைக்கிற உத்தேசம் அரசின் செயற் குறிப்பில் உள்ளது.

ஆதி திராவிட மாணவர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை.

28—(*வினா எண். 4) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட மாணவர்களுக்கான விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988–89 ஆம் கல்வியாண்டிலிருந்து விடுதியில் தங்கிப் பயிலும் ஆதி திராவிட பழங்குடி மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிட மாணவர்களுக்கு மாநில அரசு கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் உயர்த்தித் தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 25 வீதம் அதிகப்படுத்தப்படும் என்று இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாள்

1989 ஏப்ரல் 4]

கேட்டுக்கொள்வது, இந்த உதவித் தொகை எந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது ? இன்றைக்கு அந்த மாணவர்கள் தங்கிப் பயிலக்கூடிய விடுதிகளில் எந்தவிதமான வசதிகளும் இல்லை. குடி தண்ணீர் வசதி இல்லை; குளியலறை வசதி இல்லை; கொசுத் தொல்லை மிக அதிகமாக உள்ளது; உணவின் தரம் மிக மோசம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வருணனையா அல்லது வினாவா ?

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, நான் குறைகளைத் தான் சொல்கிறேன். அவற்றைச் சொல்லித்தான் ஆக வேண்டும். இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இருப்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரித்துக் கொடுக்க அரசு உத்தர விடுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, உதவித் தொகை ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் 1987 ஆம் ஆண்டு தொழில் சார்ந்த படிப்புக்கு ரூ. 75-ம், பட்டப் படிப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 70-ம், தொழில் மற்றும் நுட்பப் படிப்புக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 60-ம் என்ற வகையில் உயர்த்தப்பட்டு, அது இதுவரையில் இருந்து வந்தது. ஆனால் தொழில் சார்ந்த படிப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 ஆகவும், பட்டப் படிப்புக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 95 ஆகவும், தொழில் மற்றும் நுட்பப் படிப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 85 ஆகவும் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்படிப்பு, என்றால் இன்ஜினியரிங் படிக்கிறவர்கள், டாக்டருக்குப் படிக்கிறவர்கள் எல்லாம் அதிலே அடங்குவார்கள். அவர்களுக்கு மாதம் ரூபாய் 100 என்பது போதுமானதா என்பதை இந்த அரசு பரிவோடு கவனிக்க வேண்டும். அத்தோடு இன்றைக்கு அந்த உதவித் தொகை பெறக்கூடிய தகுதியை ரூபாய் 6 ஆயிரத்திலிருந்து ரூபாய் 15 ஆயிரமாக நேற்றையதினம் உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே இதையும் கணக்கிட்டு உயர்த்துவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு விடுதியிலேயும் மாணவர்களுக்கு பயிற்றுவிப்பதற்காக டியூட்டர்கள் நியமித்தார்கள். அப்போது மாதம் 50 ரூபாய் ஊதியம் அளிக்கப்பட்டது. அந்த ஊதியத்திற்கு எந்த ஆசிரியரும் விடுதிகளுக்குச் செல்லவில்லை. எனவே, டியூட்டர்களுக்குரிய தொகையை அதிகப்படுத்தி, ஆதி திராவிடர்கள் விடுதிகளுக் கெல்லாம் டியூட்டர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் நலத்துறைக்கு ஒதுக் கப்பட்ட பணத்தில் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அந்த மாணவர் களுக்கு கல்வி வழங்குகிற வகையிலே செலவழிக்கப்படுகிறது. ஆகவே, அந்த 15 கோடி ரூபாயை கல்வித் துறை ஏற்றுக்கொண்டு, இந்த 15 கோடி ரூபாயை மற்றப் பணிகளுக்கு ஒதுக்குவதற்கு அரசு வழி செய்யுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி எழுப்பினால் விவரங்கள் தெரிவிக்கப்படும்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மாணவர்களுக்கான பல விடுதி களுடைய நிலைமை இன்றைக்கு மிகமோசமான நிலைமையிலே இருப்பதை கண்கூடாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே காண லாம். பல விடுதிகளை நேரிலே பார்க்கின்ற வாய்ப்பு பெற்றவன் நான். ஆகவே சொல்கிறேன். குடிநீர் வசதிகூட இல்லாத நிலையில் பல்வேறு விடுதிகள் பாழ்பட்ட நிலை, மாணவர் களுடைய எண்ணிக்கைக்கு மேலும் அதிகமான மாணவர்கள் அதிலே தங்குகின்ற சூழ்நிலை ஆகிய இத்தனையும் அந்த ஆதி திராவிடர் மாணவர்களுடைய குடியிருப்பிலே இருக்கின்றன. அவைகளையெல்லாம் மாற்றுவதற்கு, சீர்திருத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் செல்லுகின்ற நேரத்தில் அந் தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற இப்படிப்பட்ட ஆதி திரா விடர் மாணவர் விடுதிகளை எல்லாம் நேரிலே சென்று பார்க் கக்கூடிய முறையில் நடவடிக்கை ஏதாவது அவர்கள் மேற்கொள்ள இருக்கின்றார்களா என்ற அந்த விவரங்களை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் மாத்திர மல்ல மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள்கூட, எல்லாக் கட்சியினுடைய உறுப்பினர்களும்கூட ஆதி திராவிடர்

1989 ஏப்ரல் 4]

களுடைய நலனை முன்னிட்டும், மாணவர்களுடைய நலனை முன்னிட்டும், அதுபோன்ற இடங்களுக்குச் சென்று அங்கேயிருக்கின்ற குறைகளை எழுதி அரசுக்கு அனுப்புவார்களானால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வழி ஏற்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவர்களுடைய விடுதிகள் பெரும்பாலும் தனியார் கட்டிடங்களில் உள்ளன. அந்தக்கட்டடங்களில் போதிய இடவசதி இல்லாத நெருக்கடியில் பாதகமான சூழ்நிலை உருவாகிறது. அந்த மாணவர்கள் தேர்வு பெறுவதில் கூட இயலாமல் தவறுவதற்கும் இது காரணமாக அமைகிறது. எனவே, அரசு பரிசீலித்து அனைத்துக் கட்டடங்களையும் அரசு கட்டடங்களாக உருவாக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசினுடைய நிதிநிலைமையையொட்டி பரிசீலனை செய்யப்படும்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே உள்ள பெரம்பூர் நெடுஞ்சாலையில் ஆதிதிராவிடர் அரசினர் கல்லூரி மாணவர்கள் விடுதி மிக மோசமான நிலையிலே இருக்கிறது. அதே நேரத்திலே, அதிலே தங்குவதற்குப் போதிய வசதியும் இல்லாமல் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அங்கே தங்கியிருக்கிறார்கள். அதை மாற்றியமைக்கக்கூடிய அல்லது புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா ? அப்படியென்றால் அதை என்னுடைய தொகுதியிலே கட்டித்தர ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய குறிப்புகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி எழுப்பலாம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதம் மாறிய ஆதி திராவிடர் மக்களுக்கு காலனி வீடுகள் கட்டித் தரப்படுமா ? முன்பு கட்டிய வீடுகளை அரசு செப்பனிட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புக்கத்துறை இராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம்.

29—(*வினா எண் 68) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், புக்கத்துறை கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனைக் கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?